## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 25/2017 | Date : 25.08.2023 | PW2 |
|---|---|---|
| Name: சீனிவாசன் | S/o. ரத்தினவேல் | Evidence Recorded Time: 12.36 P.M. to 12.45 P.M. |

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

மனுதாரர் சுரேஷ் என் நண்பர் என்றால் சரிதான். எவ்வாறு மனுதாரரை எனக்கு தெரியும் என்றால் இருவரும் ஒன்றாக தறி நெய்யும் தொழில் செய்து வருகிறோம். விபத்து நடந்த போது நான் எங்கிருந்தேன் என்றால் காமலாபுரம் செல்வதற்கு முன்பு உள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் அடிக்க நின்று கொண்டிருந்தேன். அப்போது திடீரென சத்தம் வந்ததால் நான் சென்று பார்த்தேன், தெரிந்தவர் அடிபட்டு கிடந்தார், அய்யோ, அம்மா வலிக்கிறது என்று கத்தினார், 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து நான் தான் அனுப்பிவைத்தேன். விபத்து சத்தம் கேட்டுதான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விபத்து சம்மந்தமாக புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் அது தெரியாது. என் நண்பர் என்பதால் நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்து சம்மந்தமான வழக்கு Mistake of fact என்று முடித்துவிட்டார்கள் என்றாலும், மனுதாரரின் மீது தான் தவறு என்பதால் வழக்கானது மேற்கண்டாவறு முடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. மனுதாரர் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்றால் மாதம் ஏழாயிரம், எட்டாயிரம் வரும், வேலை அதிகமாக இருந்தால் மாதம் பத்தாயிரம் வரும். நான் தற்போது வரை தறிதான் ஓட்டி வருகிறேன், மனுதாரர் வேறு வேலைக்கு சென்றுவிட்டார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், விபத்தை நேரில்பார்க்காத காரணத்தினால்தான் நான் காவல் நியைத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், புகார் இரண்டு நாட்கள் கழித்துதான் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் மனுதாரர் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.